அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி)

கோயம்புத்தூர் - 641 018

B.A. தமிழ் - முதலாம் ஆண்டு - முதல் பருவம்

இலக்கணம் - நன்னூல் - 18BTA13C

அலகு - I - பாயிரவியல்


பெயர் : முனைவர் சண்முக வடிவு

துறை : தமிழ்த் துறை

அலைபேசி : 90420 82864

1. பாயிரத்தின் வகை

பாயிரம் பொதுச் சிறப்பு என இரு பாற்றே.

பாயிரம் சிறப்புப்பாயிரம், பொதுப்பாயிரம் என இரு வகைப்படும்.

2. பொதுப்பாயிரத்தின் இலக்கணம்

நூலே நுவல்வோன் நுவலும் திறனே
கொள்வோன் கோடல் கூற்றாம் ஐந்தும்
எல்லா நூற்கும் இவைபொதுப் பாயிரம்.

* நூலினது இலக்கணம் * நூலைக் கற்பிக்கும் ஆசிரியரின் இலக்கணம்
* ஆசிரியர் மாணவர்க்குப் பாடம் சொல்லும் முறை.
* கற்கும் மாணாக்கரின் இயல்பு * மாணவர் பாடம் கேட்கும் முறை

ஆகிய ஐந்தும் கூறுவது பொதுப்பாயிரம் ஆகும்.

3. எழுவகை மதங்கள்

எழுவகை மதமே உடன்படல் மறுத்தல்
பிறர்தம் மதமேல் கொண்டு களைவே
தாஅன் நாட்டித் தனாது நிறுப்பே
இருவர் மாறுகோள் ஒருதலை துணிவே
பிறர்நூல் குற்றம் காட்டல் ஏனைப்
பிறிதொடு படாஅன் தனிமதம் கொளலே.

★ பிறர் கொள்கைக்குப் பொருந்தத் தன் கொள்கையை அமைத்தல்

★ பிறர் கொள்கையைப் பொருந்தாது என புறக்கணித்தல்

★ ஒருவர் கொள்கையை முதலில் ஏற்று பின் அவர் கொள்கையை மறுத்தல்.

★ தானே ஒரு கருத்தை தோற்றுவித்து அதைப் பொருந்தும் இடங்களில் எல்லாம் தவறாது நிலை நிறுத்தல்.

★ மாறுபட்ட இருவர் கருத்துக்களில் ஒருவர் கருத்தை ஏற்றல்.

★ பிறரது நூலிலுள்ள குற்றத்தைத் தயங்காது எடுத்துக்காட்டுதல்

★ பிறர் கருத்தை ஏற்காது தன் கருத்தையே கைக்கொள்ளல்

ஆகியன எழுவகை ~~ம~~மதங்களாகும்.

4. பத்துக் குற்றங்கள்

குன்றக் கூறல் மிகைபடக் கூறல்
கூறியது கூறல் மாறுகொளக் கூறல்
வழூஉச்சொல் புணர்த்தல் மயங்க வைத்தல்
வெற்றெனத் தொடுத்தல் மற்றொன்று விரித்தல்
சென்று தேய்ந்து இறுதல் நின்றுபயன் இன்மை
என்று இவை ஈரைங் குற்றம் நூற்கே.

★ பொருளை விளக்க வேண்டிய இடத்தில் சுருக்கிக் கூறுதல்

★ எளிதில் விளங்குவனவற்றிற்கு விரித்துப் பொருள் கூறுதல்

★ கூறியதைப் பயனின்றித் திரும்பக் கூறுதல்

★ ஒன்றை உயர்வுடையது எனக் கூறி பின் அதையே மறுத்துக் கூறுதல்

★ குற்றமுடைய சொற்களைச் சேர்த்தல்

★ இதற்குப் பொருள் இதுவோ அதுவோ எனத் தடுமாறும்படி கூறுதல்

★ தேவையற்ற செய்திகளை கூறுதல்

★ சொல்லத் தொடங்கியதை பாதியில் விட்டு வேறொன்றை கூறுதல்

★ தொடக்கம் சிறப்பாக அமைத்து பின் சிறப்பின்றி முடித்தல்

★ சொற்கள் இருந்தும் எவ்விதப் பயனும் இல்லாதிருத்தல்.

## ௫. பத்து அழகுகள்

சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க்கு இனிமை நன்மொழி புணர்த்தல்
ஓசை உடைமை ஆழமுடைத்து ஆதல்
முறையின் வைப்பே உலகம்மலை யாமை
விழுமியது பயத்தல் விளங்கு உதாரணத்த(து)
ஆகுதல் நூலிற்கு அழகு எனும் பத்தே.

* சொற்களைத் தேவையின்றி விரிக்காமல் சுருக்கிக் கூறுதல்
* சுருக்கிச் சொன்னாலும் தெளிவுபடக் கூறுதல்
* கற்போர்க்கு இனிமை தரும் சொற்களைக் கூறுதல்
* குற்றமற்ற சொற்களைச் சேர்த்தல்
* இதற்கு ஏற்ற சந்த நயம் புலப்பட அமைத்தல்.
* கற்கக் கற்க ஆழ்ந்த கருத்தை உடையதாதல்
* எழுத்து, சொல், பொருள், இயல், அதிகாரம் காரண, காரிய முறைப்படி அமைத்தல்.
* சான்றோர் வழக்கொடு மாறுபாடு இன்றிக் கூறுதல்
* சிறந்த பொருளை வெளிப்படுத்துதல்
* எடுத்துக்காட்டுகளைக் கொண்டு பொருளை விளங்க வைத்தல்.

ஆகியவை பத்து அழகுகளாகும்.

## 6. முப்பத்து இரண்டு உத்திகள்

நுதலிப்புகுதல் ஓத்துமுறை வைப்பே
தொகுத்துச் சுட்டல் வகுத்துக் காட்டல்
முடித்துக் காட்டல் முடிவு இடம் கூறல்
தானெடுத்து மொழிதல் பிறன்கோள் கூறல்
சொற்பொருள் விரித்தல் தொடர்ச்சொல் புணர்த்தல்
இரட்டுறமொழிதல் ஏதுவின் முடித்தல்
ஒப்பின் முடித்தல் மாட்டெறிந்து ஒழுகல்
இறந்தது விலக்கல் எதிரது போற்றல்
முன்மொழிந்து கோடல் பின்னது நிறுத்தல்
விகற்பத்தின் முடித்தல் முடிந்தது முடித்தல்
உரைத்தும் என்றல் உரைத்தாம் என்றல்
ஒருதலை துணிதல் எடுத்துக்காட்டல்
எடுத்த மொழியின் எய்த வைத்தல்
இன்னது அல்லது இதுவென மொழிதல்
எஞ்சிய சொல்லின் எய்தக் கூறல்
பிறநூல் முடிந்தது தான்உடன் படுதல்
தன்குறி வழக்கம் மிக எடுத்து உரைத்தல்
சொல்லின் முடிவின் அப்பொருள் முடித்தல்
ஒன்றின முடித்தல் தன்னினம் முடித்தல்
உய்த்து உணர வைப்பு என உத்தி எண் நான்கே.

* நான் இதைச் சொல்லப் போகிறேன் எனக் கூறித் தொடங்குதல்
* இயல்களைக் காரண, காரிய முறைப்படி அமைத்தல்
* பல பொருள்களையும் ஓரிடத்தில் தொகுத்துச் சொல்லுதல்
* தொகுத்துக் கூறியதை வேறு வேறாக வகுத்துக் காட்டுதல்
* விரித்துச் சொன்ன பொருள்களை முடித்துக் காட்டுதல்
* சொல்லும் இலக்கணத்திற்குரிய இலக்கியம் தோன்றும் இடத்தைக் கூறுதல்
* முன்னோரின் கூற்றுகளை அப்படியே எடுத்துக் காட்டுதல்
* பிறர் கொள்கைகளைக் கூறுதல்
* சொல்லின் பொருள் தெளிவுபட விளங்குமாறு விரித்துரைத்தல்
* ஒன்றற்கொன்று தொடர்புடைய சொற்களை ஓரிடத்தில் கூறுதல்
* இரண்டு பொருள்பட சொல்லுதல்
* முன்னர்க் காரணம் கூறாமல் கூறியவற்றைப் பின்னர் காரணம் காட்டி நிறுவுதல்
* ஒன்றற்குரிய இலக்கணத்தைப் பொருந்தும் பிறவற்றிற்கும் இலக்கணமாகக் கூறுதல்
* ஒன்றற்குரிய இலக்கணம் அதைப் பெறுவதற்குரிய மற்றவற்றோடு தொடர்பு படுத்திக் கூறுதல்
* வழக்கு இறந்தவற்றை நீக்குதல்
* புதிதாய்த் தோன்றியவற்றை தழுவி இலக்கணம் அமைத்தல்
* பின்பு எடுத்து ஆள்வதற்குரிய ஒன்றை முன்னரே கூறுதல்
* பின்னர் எடுத்தாளுவதற்கு ஏதுவாக ஒன்றை பொருத்தம் காட்டி பின்னே வைத்தல்
* மாறுபட வருவனவற்றை வேறுவேறாக முடித்துக் காட்டுதல்
* வேறு வேறாக முடிந்ததைப் பொது இலக்கணத்தால் தொகுத்துக் கூறுதல்.

★ இவ்விதத்தை பின்பு சொல்வோம் எனக் கூறுதல்

★ இவ்விதத்தை முன்னர்ச் சொன்னோம் எனக் கூறுதல்

★ மாறுபட்ட இருவர் கொள்கைகளுள் ஒன்றை நன்றென்று ஏற்றல்.

★ நான் கூறிய இலக்கணத்திற்குரிய இலக்கியத்தை நானே எடுத்துக் காட்டல்.

★ நான் சொல்லும் இலக்கணத்தைத் நான் எடுத்துக் காட்டிய இலக்கியத்தில் பொருந்தும்படி அமைத்துக் காட்டுதல்

★ ஐயம் தோன்றிய இடத்தில் அவ்வையத்தை நீக்கும் முகமாக இதுதான் எனக்கூறுதல்

★ சொல்லியவற்றைக் கொண்டு சொல்லப்படாதவற்றிற்கும் இலக்கணம் பொருந்தக் கூறுதல்

★ பிற நூல்களின் முடிவுகளை ஏற்றுக் கொள்ளுதல்

★ தன்னால் புதிதாக எடுத்துரைக்கப்பட்டதைப் பல இடங்களிலும் கூறுதல்

★ சொல் முடிந்த இடத்திலேயே அதன் பொருளையும் முடிவு பெறுமாறு அமைத்துக் காட்டுதல்

★ ஒன்றற்குக் கூறப்பட்ட விதி அதனோடு ஒற்றுமைப்பட்டதற்கும் அவற்றோடு இனமானவற்றிற்கும் பொருந்தும்படி அமைத்தல்

★ சில விதிகளைக் கொண்டு ஒரு பொருளை ஆராய்ந்து அறியும்படி அமைத்துக் காட்டுதல்

7. படலம்

ஒரு நெறி இன்றி விரவிய பொருளால்
பொதுமொழி தொடரின் அது படலம் ஆகும்.

ஒரு வகையாய் அமையாது கலப்புற்ற பல்வகைப் பொருள்களைப் பொது வகையால் தொகுத்து அமைப்பது படலம் ஆகும்.

8. சூத்திர வகை

பிண்டம் தொகை வகை குறியே செய்கை
கொண்டு இயல் புறனடைக் கூற்றன சூத்திரம்

சூத்திரம் பிண்டம் முதலாகப் புறனடை ஈறாக ஆறு வகைப் பாகுபாடுகளை உடையது.

* பலவகைப் பொருள்களையும் ஒரு சேரத் தொகுத்துக் கூறுதல்
* பொருள்களை வேறு வேறாகத் தொகுத்துக் கூறுதல்
* தொகுத்ததை வகுத்துக் கூறுதல்
* இஃது இன்னது எனக் கூறுதல்
* புணர்ச்சி போன்றவற்றைச் செய்வகைக் கூறுதல்
* கூறப்பட்ட இலக்கணங்களுக்கு எல்லாம் புறத்தில் அமையாகி நிற்றல் என்பனவாம்.

9. உரையின் பொது இலக்கணம்

பாடம் கருத்தே சொல்வகை சொற்பொருள்
தொகுத்துரை உதாரணம் வினா விடை விசேடம்
விரிவு அதிகாரம் துணிவு பயனொடு
ஆசிரிய வசனம் என்று ஈர் ஏழ் உரையே.

பாடம் எடுத்துரைத்தல் முதலாக பதினான்கும் உரையின் பொது இலக்கணமாகும். அவை,

* மூலபாடத்தை எடுத்துரைத்தல் * கருத்துரை கூறுதல்
* சொல்வகை கூறுதல் * சொல்லுக்குப் பொருள் உரைத்தல்
* கருத்தைத் தொகுத்துக்கூறுதல் * மேற்கோள்களை காட்டுதல்
* ஐயங்களை தானே தோற்றுவித்தல் * அதற்குரிய விடையை கூறுதல்

* நூல் கூறும் பொருளைத் இடத்திற்கேற்ப சிறப்புப் பொருளை எடுத்துரைத்தல்
* விரித்துக் கூற வேண்டிய இடத்து விளக்கமாகக் கூறுதல்
* சொல்லும் பொருளை அதிகாரத்துடன் பொருத்தமுறக் காட்டுதல்
* ஐயம் ஏற்படும் இடங்களில் இதுவே பொருள் எனத் துணிந்து கூறுதல்.
* இவ்வாறு துணிவுறக் காட்டுவதால் ஏற்படும் பயனை எடுத்துரைத்தல்
* உரையாட்சித் தொன்னூல் ஆசிரியர்களின் பாடங்களை இயைத்துக் காட்டுதல் என்பன.

10. காண்டிகை உரை

கருத்துப் பதப்பொருள் காட்டு மூன்றினும்
அவற்றொடு வினா விடை ஆக்க லானும்
சூத்திரத்து உட்பொருள் தோற்றுவ காண்டிகை

கருத்துரை கூறுதல், பதப்பொருள் கூறுதல், எடுத்துக்காட்டால் நிறுவுதல் ஆகிய மூன்றனைச் சொல்லுதல் அவற்றுடன் வினா எழுப்புதல், விடை கூறி விளக்குதல் ஆகிய இரண்டையும் கூட்டிச் சொல்லுதல் என்னும் ஐந்தால் சூத்திரத்தின் பொருளை விளக்குவது காண்டிகை.

11. விருத்தி உரை

சூத்திரத்து உட்பொருள் அன்றியும் ஆண்டைக்கு
இன்றியமையா யாவையும் விளங்கத்
தன்னுரை யானும் பிறநூ லானும்
ஐயம் அகல ஐங் காண்டிகை உறுப்பொடு
மெய்யினை எஞ்சாது இசைப்பது விருத்தி

சூத்திரப் பொருளை விளக்குதல், அதிகாரத்திற்குத் தேவையான பொருள்களைத் தன்னால் கொண்டும் பிறரால் கொண்டும் இயைந்துகத் தெளியவைத்தல், இன்னின்னவை உறுப்பாக எழுதிய இன்பது உறுப்பும் கூட ஐயம் அகல உண்மைப் பொருளைத் தெளிவுபட விரிவாக உரைத்தல் ஆகிய அனைத்து தன்மைகளையும் கொண்டதே விருத்தியுரையாகும்.

2. நல்லாசிரியரின் இலக்கணம்

குலன் அருள் தெய்வம் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலம்மலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகியல் அறிவோடு உயர்குணம் இனையவும்
அமைபவன் நூலுரை யாசிரி யன்னே.

நற்குடிப்பிறப்பு, இரக்க உணர்வு, தெய்வ வழிபாடு, பெருந்தன்மை, பல நூல்களைக் கற்றுத் தெளிந்த அறிவு, சுவைபடவும், தெளிவாகவும் விளக்கும் சொல்லாற்றல், நிலம், மலை, நிறைகோல், மலர் என்பவற்றை ஒத்த சிறந்த குணங்கள் உடைமை, காலத்திற்கேற்ப சிந்திக்கும் ஆற்றல். இவற்றைப் போன்ற பிற உயர்ந்த குணங்களையும் பெற்றிருத்தல். ஆசிரியர்க்கு நிலம், மலை, நிறைகோல், மலர் ஆகியவை உவமைகளாகக் காட்டப்பட்டுள்ளன.

## நிலத்தின் மாண்புகள்

தெரிவரும் பெருமையும் திண்மையும் பொறையும்
பருவ முயற்சி அளவிற் பயத்தலும்
மருவிய நன்னில மாண்பா கும்மே.

| நிலம் | ஆசிரியர் |
|---|---|
| 1. இடத்தில் நின்று அளவிட முடியா உருவப் பெருமை உடையது | பிறரால் அறிய முடியாக் கல்விப் பெருமை உடையது |
| 2. எவ்வளவு சுமை ஏற்றினாலும் கலங்காது | எத்துணைப் பெரிய கல்வியாளன் அறிவும் கலங்காது வாதம் புரிதல் |
| 3. குத்தினும் வெட்டினும் பொறுத்துக் கொள்வது | மாணாக்கரும் பிறரும் செய்யும் குற்றங்களைப் பொறுத்தல் |
| 4. உழவரின் உழைப்புக்கு ஏற்பப் பயன் அளிப்பது | மாணாக்கரின் முயற்சிக்கு ஏற்பப் பயன் படுத்தல். |

## மலையின் மாண்புகள்

அளக்க லாகா அளவும் பொருளும்
துளக்க லாகா நிலையும் தோற்றமும்
வறப்பினும் வளந்தரும் வண்மையும் மலைக்கே.

| மலை | ஆசிரியர் |
|---|---|
| 1. அளக்க முடியா அளவு உடையது | அளவிலாக் கல்வியறிவு உடையது |
| 2. அளக்க முடியா பொருள் வளம் உடையது | பன்னூல் புலமை உடையது |
| 3. எத்தகையோராலும் அசைக்க முடியாது | பிற புலவராலும் வெல்ல முடியா கல்வியறிவு உடையது. |
| 4. தொலைவில் உள்ளவர்களும் காணும்படியான உயரம் உடையது. | தொலைவில் உள்ளவரும் அறியும் கல்விப் புகழுடையது. |
| 5. வானம் வறண்டு போகும்போதும் சுனைகளால் நீர் தரும் கொடைத்தன்மை உடையது. | தான் வறுமை அடைந்தாலும் மாணவர்களுக்குக் கல்வி கொடுக்கும் உள்ளத்தன்மை உடையது. |

## நிறைகோல் மாண்புகள்

ஐயம் தீரப் பொருளை உணர்த்தலும்
மெய்ந்நடு நிலையும் மிகுநிறை கோற்கே.

| நிறைகோல் | ஆசிரியர் |
|---|---|
| 1. பொருளின் அளவை ஐயம் தீரத் தெளிவாகக் காட்டுதல் | கல்வியை ஐயமறக் கற்றுத் தருதல் |
| 2. எப்பக்கமும் சாயாமல் நடுநிற்றல் | வேண்டியவர் வேண்டாதவர் என எவர்பக்கமும் சாயாது நடுநிற்றல் |

## மலரின் மாண்புகள்

மங்கலம் ஆகி இன்றி யமையாது
யாவரும் மகிழ்ந்து மேற்கொள மெல்கிப்
பொழுதின் முகமலர் உடையது பூவே.

| மலர் | ஆசிரியர் |
|---|---|
| 1. மங்கல காரியங்களுக்கு உடையது | நன்மையான செயல்களுக்கு உரியவர் |
| 2. தானின்றி எச்செயலும் நடைபெறாச் சிறப்புடையது | ஆசிரியர் இன்றி எச்செயலும் நடைபெறாமை. |
| 3. எல்லோரும் விரும்பிச் சூடும் தன்மை கொண்டிருத்தல் | அனைவராலும் போற்றப்படுகின்ற திணமுடைமை. |
| 4. மென்மைத் தன்மை உடையது | எல்லோரும் எளிதில் நெருங்கி அன்பு பாராட்டுதல் |
| 5. உரியகாலத்தில் மலர்தல் | எப்போதும் முக மலர்ச்சி உடைமை. |

## 13. ஆசிரியர் ஆகாதாரின் இயல்பு

மொழிகுணம் இன்மையும் இழிகுண இயல்பும்
அழுக்காறு அவா வஞ்சம் அச்சம் ஆடலும்
கழற்குடம் மடற்பனை பருத்திக் குண்டிகை
முடத்தெங்கு ஒப்புஎன முரண்கொள் சிந்தையும்
உடையோர் இலர்ஆ சிரியரா குதலே.

நூலாசிரியருக்குக் கூறப்பட்ட நற்குணங்களும் கல்வி கற்பிக்கும் ஆற்றலும் இல்லாமை, இழிந்த குணங்களை இயல்பாகக் கொண்டிருத்தல், பொறாமை, பேராசை, வஞ்சகம் உடைமை, மாணவர்களைக் கண்டு தான் அஞ்சுதல், தன்னைக் கண்டு மாணவர்கள் அஞ்சும்படி பேசுதல், கழற்குடம், மடற்பனை பருத்திக்குண்டிகை, முடத்தெங்கு போன்ற மாறுபட்ட தன்மை உடையராதல் ஆகியவை ஆசிரியர் ஆகாதார்க்கு உரிய இலக்கணம் ஆகும். ஆசிரியர் ஆகாதார்க்கு கழற்குடம், மடற்பனை, பருத்திக் குண்டிகை, முடத்தெங்கு ஆகியவை உவமையாகக் காட்டப்பட்டுள்ளன.

## 14. மடற்பனையின் தன்மை

தானே தரக்கொளின் அன்றித் தன்பால்
மேவிக் கொளக்கொடா இடத்தது மடற்பனை.

| மடற்பனை | ஆசிரியர் ஆகாதார் |
|---|---|
| 1. பழங்களைத் தானே கொடுப்பது அன்றி விரும்பிய நேரத்தில் விரும்பும் வகையில் ஏறிப் பறித்துக் கொள்ள இயலாது. | தானே முன் வந்து கற்றுக் கொடுப்பது அன்றிப் பிறர் தன்னிடம் நெருங்கிக் கற்கவரின் அவர்க்கு கற்றுக் கொடுக்க மாட்டார். |

15. குடத்தெங்கின் தன்மை

பலவகை உதவி வழிபடு பண்பின்
அலைபோர்க்கு அளிக்கும் அருமைத் தெங்கே

| குடத்தெங்கு | ஆசிரியர் ஆகாதார் |
|---|---|
| 1. நீர்ப்பாய்ச்சி உரம் இட்டு வளர்ப்பவருக்குப் பயன்படாமல் அடுத்தவருக்குப் பயன்களைத் தருவது. | பொருள் கொடுத்து வழிபடுபவர்களை விடுத்துப் பிறருக்குக் கற்றுக் கொடுப்பவர். |

16. பாடம் சொல்லும் வரலாறு

ஈதல் இயல்பே இயம்பும் காலைக்
காலமும் இடனும் வாலிதின் நோக்கிச்
சிறந்துழி இருந்து தன் தெய்வம் வாழ்த்தி
உரைக்கப் படும்பொருள் உள்ளத்து அமைத்து
விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
கொள்வோன் கொள்வகை அறிந்து அவன் உளங்கொளக்
கோட்டமில் மனத்தில் நூல் கொடுத்தல் என்ப.

நல்ல இடத்தையும் ஏற்ற காலத்தையும் தேர்ந்தெடுத்தல், தான் மாணவர்களைக் காணும் படியாகவும் தன்னை மாணவர்கள் காணும்படியாகவும் மேம்பட்ட இடத்தில் இருத்தல். கடவுளைத் தொழுத பின்னரே கற்பிக்கத் தொடங்குதல், கற்பிக்கப் போகும் பொருளைத் தன் மனத்துள் முன்னரே நன்றாக நினைத்து வைத்தல், பொறுமையுடனும் சினம் இல்லா இனிய முகத்துடனும் விருப்பத்தோடும் கற்பித்தல்.

மாணாக்கரின் மனநிலை அறிந்து அதற்கு ஏற்றபடி எடுத்து உரைத்தல், தன்மனம் கொள்ளாமலும் மாணவர் மனம் கொள்ளாமலும் நூலைக் கற்றுக் கொடுத்தல். இதுவே ஆசிரியர் மாணாக்கர்க்குக் கற்றுக் கொடுக்கும் முறையாகும்.

17. மாணாக்கர் வகைகள்

நூலைக் கற்கும் மாணவர்கள் அவர்களின் கற்கும் தன்மைக்கு ஏற்ப மூவகையாகப் பாகுபடுத்தப்படுவர்.

அன்னம் ஆவே மண்ணொடு கிளியே
இல்லிக் குடம் ஆடு எருமை நெய்யரி
அன்னர் தலைஇடை கடைமா ணாக்கர்.

* தலை மாணாக்கர் அன்னத்திற்கும் பசுவிற்கும் ஒப்பாவர்.
* இடை மாணாக்கர் மண்ணையும் கிளியையும் ஒப்பாவர்.
* கடை மாணாக்கர் ஓட்டைக்குடம், ஆடு, எருமை, நெய்யரியை (பன்னாடை) போன்றவர்கள்.

தலை மாணாக்கர்

| | | |
|---|---|---|
| 1. அன்னம் | : பாலும் நீரும் கலந்திருப்பின் பாலை உண்டு நீரை நீக்கும் | ஆசிரியர் கூற்றிலிருந்து தேவையானவற்றை எடுத்துக் கொண்டு தேவையற்றதை விட்டு விடுவர் |
| 2. பசு : | ; நல்ல புல்வெளிக் காணின் நிறைந்து மேய்ந்து பின்னர் அசைபோட்டு இருக்கும் | ஆசிரியரிடம் கேட்ட பாடத்தை சிறிது சிறிதாக நினைவுக்கு கொண்டு வந்து சிந்தித்து மனத்தில் நிறுத்துவர். |

## இடை மாணாக்கர்

| | |
|---|---|
| 1. மண் : உழைப்பிற்கேற்ப மண் விளைவினைக் கொடுக்கும் | ஆசிரியரின் உழைப்பிற்கேற்ற அறிவைப் பெறுவர் |
| 2. கிளிப்பிள்ளை : சொன்னதை மட்டும் சொல்லும் | ஆசிரியர் கற்பித்த நூற்பொருளைத் தவிர பிறவற்றைச் சொல்லார். |

## கடை மாணாக்கர்

| | |
|---|---|
| 1. ஓட்டைக்குடம் (இல்லிக்குடம்) : நீரை எவ்வளவு ஊற்றினாலும் வெளியாகும். | பாடம் கேட்கும் போதே மனதில் கொள்ளாமல் விட்டுவிடுவர். |
| 2. ஆடு : ஓரிடத்தில் மேய்ந்து வயிறு நிரம்பாது அலைந்து திரியும் | ஓர் ஆசிரியனிடம் முழுமையாகக் கல்லாது பலரிடம் சென்று முழுமை இல்லா அறிவுடன் இருப்பர். |
| 3. எருமை : நல்ல நீரைக் கலக்கிக் குடிக்கும். | ஆசிரியரின் உள்ளத்தை வருந்தச் செய்து கற்பர் |
| 4. [illegible] (பன்னாடை) : நல்ல பொருளை விட்டு அழுக்கைத் தேக்கிக் கொள்ளும் | நல்லதை விடுத்துத் தேவையற்றதை மனதில் நிறுத்துவர். |

18. மாணாக்கர் ஆகாதவர்

களி மடி மானி காமி கள்வன்
பிணியன் ஏழை பிணக்கன் சினத்தன்
துயில்வோன் மந்தன் தொன்னூற்கு அஞ்சித்
தடுமாறு உளத்தன் தறுகணன் பாவி
படிறன் இன்னோர்க்கு பகரார் நூலே.

* கள் குடிப்பவன் * சோம்பேறி * பெரியோரை மதிக்காதவன் * காமுகன் * திருடன் * நோய்வாய்ப்பட்டவன் * மிகுந்த வறுமையுடையவன் * மாறுபட்டுப் பேசுபவன் * கோபக்காரன் * எப்பொழுதும் உறங்குபவன் * அறிவுக்கூர்மை அற்றவன் * பழைய நூல்களைக் கண்டு மனம் தடுமாறுபவன் * நான் என்ற வீரம் (அகந்தை) பேசுபவன் * பாவத்தொழில் செய்பவன் * பொய் பேசுபவன் ஆகியோர் மாணாக்கர் ஆகாதவர். ஆகவே இவர்களுக்கு ஆசிரியர் நூலைக் கற்றுக் கொடுக்கக் கூடாது.

19. நூல் பயிலும் முறை

நூல்பயில் இயல்பே நுவலின் வழக்கு அறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
ஆசாற் சார்ந்தவை அமைவரக் கேட்டல்
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினாதல் வினாயவை விடுத்தல் என்று இவை
கடனாக் கொளினே மடம்நனி இகக்கும்.

நூலைக் கற்கும் மாணவன் உலக வழக்கையும் செய்யுள் வழக்கையும் அறிதல், மூல பாடத்தை உயர்வாகப் போற்றிப் பலகாலும் சிந்தித்தல், கேட்ட பாடத்தை நினைவுகூர்ந்து பார்த்தல், மீண்டும் ஆசிரியரிடம் சென்று கேட்டவற்றைக் குறைதீரக் பதியும்படிக் கேட்டல், எப்போதும் கல்வியைப் பற்றிப் பேசும் மாணவர்களிடம் பழகுதல், தன் ஐயத்தைப் பிறரிடம் கூறித் தெளிவு பெறுதல், பிறரது ஐயத்தைத் தெளிவுபடுத்துதல் ஆகியவற்றை மாணவன் தனக்குரிய கடமைகளாகக் கொண்டு செயல்பட்டால் அவனது அறியாமை விரைவில் நீங்கும்.

2. சிறப்புப் பாயிரத்தின் இலக்கணத்தினை நன்னூல் வழி விளக்குக.

ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனொடு ஆயெண் பொருளும்

நூலை எழுதியவன் பெயர், நூல் வந்த வழி, நூல் வழங்கும் நாட்டின் எல்லைகள், நூலின்பெயர், தொகை, வகை, விரியின் ஒன்றாதல், நூல் கூறும் பொருள், நூலைக் கேட்டற்கு உரியர், நூலைக் கேட்பதால் உண்டாகும் பயன் ஆகிய எட்டையும் பொருந்தக் காட்டுவதே சிறப்புப் பாயிரத்தின் இலக்கணமாகும்.

காலம் களனே காரணம் என்றுஇம்
மூவகை ஏற்றி மொழிநரும் உளரே

நூல் செய்த காலம், நூலை அரங்கேற்றிய அவைக்களம், நூல் செய்தற்குரிய காரணம் ஆகிய இம்மூன்றையும் சேர்த்துப் பதினொன்றாகக் கூறுபவரும் இருக்கின்றனர்.

## நூலுக்குப் பெயர் அமையும் விதம்

நூல் பெரும்பான்மை காரணம் பற்றியும் சிறுபான்மை இடுகுறியாகவும் பெயர் பெறும். அவை எட்டுவிதமாக அமையும்.

முதல்நூல் கருத்தன் அளவு மிகுதி
பொருள் செய் வித்தோன் தன்மை முதலி னிமித்தினும்
இடுகுறி யானும் நூற்கு எய்தும் பெயரே

ஒரு நூலுக்கு முதல்நூல் முதலாகத் தன்மை ஈறாகக் கூறிய ஏழும் பற்றுவமாகிய காரணங்களாலும், இடுகுறியாலும் பெயர் அமையும்.

1. முதல்நூலால் பெயர் பெற்றவை - பாரதம், இராமாயணம்
2. ஆக்கியோனால் பெயர் பெற்றவை - அகத்தியம், தொல்காப்பியம்
3. அளவால் பெயர் பெற்றவை - பன்னிருபடலம், நாலடி நானூறு
4. மிகுதியால் பெயர் பெற்றவை - களவியல் போன்றவை
5. பொருளால் பெயர் பெற்றவை - அகப்பொருள், புறப்பொருள்
6. செய்வித்தோனால் பெயர் பெற்றவை - சாதவாகனம், வீரசோழியம்.
7. தன்மையால் பெயர் பெற்றவை - சிந்தாமணி, நன்னூல்
8. இடுகுறியால் பெயர் பெற்றவை - நிகண்டு, கலைக்கோட்டுத் தண்டு.

## நூல் யாப்பின் வகைகள்

தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்ப்பு
எனத்தகும் நூல்யாப்பு ஈரிரண்டு என்ப.

* விரிந்து கிடப்பவற்றைத் தொகுத்துச் சொல்லுதல்
* தொகையாய்க் கிடப்பவற்றை விரித்துச் சொல்லுதல்
* தொகுத்தும், விரித்தும் சொல்லுதல்
* ஒருமொழியாலுள்ள நூலை வேறு மொழியால் பெயர்த்துக் கூறுதல் இந்நான்கும் நூல் யாப்பின் வகைகள்.

## சிறப்பு பாயிரம் செய்தற்கு உரியோர்

தன் ஆசிரியன் தன்னொடு கற்றோன்
தன்மாணாக்கன் தகும் உரைகாரன் என்று
இன்னோர் பாயிரம் இயம்புதல் கடனே.

தனக்கு நூலைக் கற்பித்த ஆசிரியன், தன்னுடன் பாடம் கேட்டவன், தன்னுடைய மாணாக்கன், தான் செய்த நூலுக்கு உரை எழுதும் தகுதி படைத்தவன் ஆகிய நால்வருள் ஒருவர் சிறப்புப் பாயிரம் செய்தற்கு உரியராவர்.

## சிறப்புப்பாயிரத்தைப் பிறர் செய்யக் காரணம்

தோன்றா தோற்றித் துறைபல முடிப்பினும்
தான்தன் புகழ்தல் தகுதி அன்றே.

பிறர்க்குத் தோன்றாத நுட்பங்கள் எல்லாம் தோன்றும்படி பல துறைகள் அமைய ஒரு நூலை ஒருவன் செய்து முடித்தான். அத்தகு சிறப்புத் தன்மை உடையவனாயினும் அவன் தன்னைத்தானே புகழ்தல் தகுதியற்றதாகும். எனவே சிறப்புப் பாயிரத்தை பிறர் செய்தலே பொருத்தம் உடையதாகும்.

## தற்புகழ்ச்சி குற்றமாகா இடங்கள்

மன்னுடை மன்றத்து ஓலைத் தூக்கினும்
தன்னுடை ஆற்றல் உணரார் இடையினும்
மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினும்
தன்னை மறுதலை பழித்த காலையும்
தன்னைப் புகழ்தலும் தகும்புல வோர்க்கே.

மன்னன் அவைக்கு ஓலை எழுதுதல், தன் வலிமையை அறியாதவர், அவைக்களத்தில் வாதம் செய்து வெல்லுதல், தன்னைப் பிறர் பழித்தல் ஆகிய நான்கு இடங்களிலும் புலவன் ஒருவன் தன்னைத் தானே புகழ்ந்து கொள்ளுதலும் தகுதியானதாகும்.

## பாயிரத்தின் இன்றியமையாமை

ஆயிரம் முகத்தான் அகன்றது ஆயினும்
பாயிரம் இல்லது பனுவல் அன்றே.

ஆயிரம் உறுப்புகளைக் கொண்டதாய்ப் பரந்து விரிந்த நூலாக இருப்பினும் பாயிரத்தை பெறாவிடில் அது நூலாகாது.

## பாயிரத்தின் சிறப்பு

மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்
ஆடமைத்தோள் நல்லார்க்(கு) அணியும் போல்-நாடிமுன்
ஐதுரையா நின்ற அணிந்துரையை எந்நூற்கும்
பெய்துரையா வைத்தார் பெரிது.

* மாட மாளிகைக்கு ஓவியமும்
* பெரிய நகரத்திற்குக் கோபுரமும்
* அசைகின்ற மூங்கில் போன்ற தோளை உடைய பெண்களுக்கு அணியும் அழகு சேர்ப்பன
* அவற்றைப்போலக் கருதி நுண்ணிய பொருளைக் கூறும் பாயிரங்களை எவ்வகைப் பட்ட நூல்களுக்கும் முன்னர் வைத்தனர் பெரியோர்.

ஆதலால் முதலில் பாயிரம் இல்லாதது நூலாகாதாம்.